தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1975 அக்டோபர் 25

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

I.T.I Instructor's Scale of Pay to the Mechanic Teachers

* 11 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state whether there is any proposal to grant I.T.I. Instructor's Scale of Pay to the Mechanic Teachers working in the Engineering Sections of the High Schools, who possess the same qualifications as the I.T.I. Instructors ?

இயந்திரவியல் ஆசிரியர்களுக்கு தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியர் வீதத்தில் சம்பளம்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியர்களைப் போன்றே கல்வித் தகுதி பெற்று, அரசு உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த பொறியியல் பிரிவுகளில் பணியாற்றும் இயந்திரவியல் ஆசிரியர்களுக்கும் தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியருக்கு வழங்கப்படும் வீதத்தில் சம்பளம் வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய பாடத் திட்டத்திலே இன்ஜினியரிங், செகரட்டேரியல் போன்ற வைஃபர்கேடட் கோர்ஸூக்கான பாடத் திட்டமானது வரவில்லை. அந்த அடிப்படையிலே 11 ஆண்டுக்கு அந்த வகுப்புகள் நடத்தப்படுவதால், இந்த ஓராண்டுக் காவது வைஃபர்கேடட் கோர்ஸ் இருக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றித் தனியாக ஆராய வேண்டும்.

Mismanagement of G.V.B. High School, Kanniservaipatti in Madurai district.

* 12 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that representations have been made to the Government from the public and the teachers regarding the

mismanagement of G.V.B. High School, Kanniservaipatti in Madurai district ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

மதுரை மாவட்டம், கன்னிசேர்வைப்பட்டி, G.V.B உயர்நிலைப் பள்ளியின் முறையற்ற நிர்வாகம்

திரு பி. ஆர், தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) மதுரை மாவட்டம் கன்னிசேர்வைப்பட்டியிலுள்ள G.V.B. உயர்நிலைப் பள்ளியின் முறையற்ற நிர்வாகம் குறித்து பொதுமக்களிட மிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் அரசுக்கு முறையீடுகள் வந்துள்ள னவா?

(இ) ஆமெனில் அதையொட்டி என்ன நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பள்ளியின் அங்கீகாரம் கல்வி ஆண்டு 1975-76 முதல் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: மதுரை மாவட்டத்தில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை தனியார் பள்ளிகளிலே தவறு செய்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது. அதே தருணத்திலே 27 ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாத ஊழியர்களும் எவ்வித இழப்பும் ஏற்படாது பணியில் அமர்த்தப்பட்டு இருப்பது பாராட்டவும் நன்றி தெரிவித்துக்கொள்ளவும் உரியது என்றாலும்கூட, அந்தப் பள்ளி மானியமாகப் பெற்றுள்ள தளவாடங்களை திரும்பப் பெற்று, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்குக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நாம் மானியமாக ஏற் கெனவே கொடுத்தது அவைகள் இருக்குமானால், அவற்றைத் திரும்பப் பெறுவதற்கு வழி முறைகள் இருக்கின்றன. அதற்குத் தனியாக நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Z.K.M. High School, Bodinayakanur.

* 13. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the for Education be pleased to state—

(*a*) whether any representation has been received during the beginning of 1975 from the Correspondent, Z.K.M. High School, Bodinayakanur, requesting the Government to accord permanent permission to admit girl pupils in their school ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?